**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE

(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

**S.C. No.14/2025**

1. Deposition of Witness for : P.W.7
2. Name : திரு.தமிழ்ச்செல்வன்
3. Occupation : காவல் ஆய்வாளர்,
4. Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 23.03.2026**.**

3,4,5 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை மனு ஏற்பு.

As per Sec 530 Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023 recording of evidence ordered to be held through VC Mode. சாட்சி VC மூலமாக சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை** :-

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்ட திருப்பத்தூர் நகர காவல் ஆய்வாளராக பணிபுரிகிறேன். கடந்த 21.07.2023 அன்று வேலூர் மாவட்ட காட்பாடி வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது விருதம்பட்டு காவல் நிலையத்தில் பணியிலிருந்தபோது எனக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் அன்று பகல் 02.00 மணியளவில் நான் போலீஸ் பார்ட்டியுடன் காங்கயநல்லூர் ரோடு சத்தியா மேன்சன் லாட்ஜ் அறை எண்.206 ல் தங்கியிருந்த நபர்களை விசாரிக்க தனது பெயர் ராஜா (எ) வசூல் ராஜா, சையத்

மன்சூர், கௌஷ் பாஷா, சதீஷ் குமார், மோகன் குமார் (எ) வெள்ளை மோகன் என்பவர்கள் பெயர் சொன்னார்கள். மேலும் விசாரிக்க கொள்ளையடிக்க சதித்திட்டம் தீட்டிக்கொண்டிருந்ததாக சொன்னவர்களை வசூல் ராஜா தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் இளங்கோவன், கணேசன் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் மதியம் 04.00 மணிக்கு எதிரி ராஜாவிடமிருந்து TATA Indica car No.TN-18-Q-5719 என்ற காரையும் எதிரி சையத் மன்சூர் ஆஜர் படுத்திய கத்தியையும், எதிரி கௌஷ் பாஷா ஆஜர் செய்த உருட்டுக்கட்டையையும், எதிரி சதீஷ் குமார், எதிரி மோகன் குமார் ஆகியவர்களிடமிருந்து உருட்டுகட்டையையும் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்தேன். மாலை 06.00 மணிக்கு எதிரிகள் மற்றும் வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரிகள் மீது நிலையக் குற்ற எண்.142/2023 இ.த.ச. பிரிவு 399 என வழக்கு பதிவு செய்தேன். அச்சுப்படிவ முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.9. எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு ஒப்புவித்தேன். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 399 ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**:-

எதிரிகள் சத்தியா மேன்சன் லாட்ஜில் எப்போது வந்து தங்கினார்கள் என்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் சாட்சிகளை மட்டும் விசாரித்தேன். சத்தியா மேன்சன் லாட்ஜில் அறை எண்.206 யார் பெயரில்

அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. எதிரிகள் எவ்வித திட்டமும் தீட்டவில்லை என்றும் புள்ளி விவர கணக்கிற்காக பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளினுடைய கை ரேகை ஆயுதத்தில் இருந்தது என்பது நிரூபனம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசரில் அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையுள்ள ஆவணங்களில் குற்ற எண்.142/2023 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி. இவ்வழக்கின் குற்ற எண் காவல் நிலையத்தில் கேட்டு கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு குறிப்பிடப்பட்டதை கைப்பற்றுதல் மகசரில் குறிப்பிடவில்லை என்றால் சரி. தவறுதலாக எதிரிகள் மீது வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Ensured that the witness evidence is recorded through video conferencing is not tutored and witness is not in the company of any body at the time.

Typed to my dictation in open Court, read over by the Witness through Video conferencing, admitted and acknowledged by him to be Correct.

P V SANDILYAN

Digitally signed by P V SANDILYAN
Date: 2026.03.23 19:05:19 +0600

Additional District Judge(FTC),
Vellore.